இது பதவி உயர்வு பற்றியது. வெளிநாட்டுக்கு அனுப்புவது பற்றிய பிரச்சினை இதில் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை எடுத்து விடுகிறீர்களா? இருந்தது என்றால் அதற்கு நான் பதில் சொல்ல வேண்டியது சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 25, திரு. வி. கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கேட்பார்கள்.

25—

அரசு மருத்துவமனைகளில் நவீன கருவிகளை நிறுவ, பழுது பார்க்க, பராமரிக்க தனி அமைப்பு

*10074 திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு மக்கள், நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மருத்துவமனைகளில் நவீன கருவிகள் நிறுவவும், பழுதுபார்க்கவும், பராமரிக்கவும் ஒரு தனி அமைப்பு உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கருவிகளைப் பராமரிப்பதற்காக ஏற்கனவே உள்ள அமைப்புக்களின் பணிகளை ஒருங்கிணைத்து இப்பணியை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் வகையில் ஒரு தனி அமைப்பை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு மருத்துவமனைகளைக் காட்டிலும் தனியார் மருத்துவமனைகளில் எல்லாவிதமான கருவிகளும் — ஆப்பரேஷன் கருவிகள், மற்ற எல்லாக் கருவிகளும்—அங்கே நிறைந்து இருப்பதாகச் சொல்கிறார்களே, ஆனால், நம்முடைய அரசு மருத்துவமனைகளில் நாம் நினைக்கக் கூடிய, டாக்டர்கள் எந்தக் கருவி வேண்டுமென்று சொல்

கிறார்களோ அந்த முக்கியமானதெல்லாம் சில சமயங்களில் இல்லை என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா; அப்படியென்றால், அதை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகள் ஏதாவது செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் அதற்காக நிதியைத் தனியாக ஒதுக்க என்னென்ன தேவை என்று அவர்கள் பட்டியல் கொடுக்கிறார்களோ, அவற்றையெல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதிலே மிக கவனமாக இருந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, இதுபற்றி நான் ஒருமுறை இதே மன்றத்திலே தெரிவித்திருக்கிறேன். நமக்கு இருக்கிற பிரச்சினையே, ஆரம்பத்திலேயிருந்து இந்தத் துறையிலே நிறைய கருவிகள் வாங்க வேண்டிய அவசியம் இருக்கிறது; மருந்துகள் வாங்கவேண்டிய அவசியம் இருக்கிறது ; ஆனால், இதற்கென்று தனியாக ஒரு அமைப்பு ஏற்படுத்தாமல் இருந்ததுதான் இதிலே இருக்கிற மிகப்பெரிய சிக்கல், மற்ற பணிகளைப் பார்க்கிற அதிகாரிகளே இதையும் பார்க்கிற காரணத்தினால், இதிலே பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனவேதான், அதற்காக ஒரு தனி அமைப்பு வேண்டுமென்று சொல்லி, ஏற்கெனவே கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கான உத்தரவு கொடுத்து, ஒரு தனி கார்ப்பரேஷன் அமைக்கவேண்டுமென்று நாம் தெரிவித்தோம். அதற்காக இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே சில புரசிஜர்கள் இருக்கின்றன. அதனால், இப்போது கொஞ்சம் கால தாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் தனி அமைப்பு என்பது, மொத்தமாக எவ்வளவு தேவை என்பதை முதலிலேயே சரியாக ''அஸெஸ்'' செய்ய வேண்டும். இப்போது அந்த முறை நமக்கு போதிய அளவிற்கு இல்லை. ஒரு மருத்துவமனையைப் பார்க்கிற சூபரின் டன்டே அந்த ''அஸெஸ்மென்ட்''டையும் எடுத்துக் கொடுக்கிற காரணத்தினால், அவர்களின் பணிப் பளுவின் காரணமாக, அவர்களால் சரியாக செய்ய முடியவில்லை. எனவேதான், கடந்த ஆண்டு பட்டியலை அப்படியே ''பாஸ்-ஓவர்'' செய்துகொண்டே இருக்கிறார்கள். ஏதோ 20 ஆண்டு காலத்திற்கு முன்னாலே போட்ட பட்டியலை அப்படியே அனுப்பிக் கொண்டிருப்பார்கள். எனவே தான், இதிலே சிக்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்போது நாம் செய்திருக்கிற ஏற்பாடு, ஒரு தலைமை அமைப்பு இங்கே இருக்கும் ; ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனியாக இந்த கார்ப்பரேஷனுடைய ''விங்'' அங்கே இருக்கும். அங்கே அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ''அஸெஸ்'' செய்ய வேண்டும். என்ன தேவை; என்ன கொடுக்க வேண்டும்; எதைத் திருப்பி எடுக்க வேண்டும்; ரிப்பேர் ஆனதை எப்படி ரிப்பேர் செய்து

கொடுப்பது; இப்படி, அத்தனையையும் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, இப்போது கட்டில் இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், அதிலே ஒரு ''புஷ்'' போய்விட்டது என்றால்கூட தூக்கிப் போட்டுவிடுகிறார்கள்; அது வீணாகப் போய்விடுகிறது. அதற்குப் பின்னாலே அது பயன்படாமல் போய்விடுகிறது. எனவே, அவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தலைமை மருத்துவமனை இருக்கிற இடத்தின் பக்கத்திலே, அதற்காக ஒரு ''ஒர்க்ஷாப்லப'' வைத்து, அவற்றையெல்லாம் அங்கே கொண்டுவந்து, ரிப்பேர் செய்து, மீண்டும் 'டிஸ்ட்டிரிப்யூட்'' செய்ய வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடமைகளைச் செய்வதற்கு அரசு அதிகாரிகளாக இருக்கிறபோது, அவர்களுக்கு சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதை எடுத்துச் செய்வதற்கு சில உயர் அதிகாரிகளிடத்திலே அனுமதி வாழ்க வேண்டும். அதில் காலதாமதம் ஏற்பட்டுவிடுகிறது. ஒரு பொருளை வேண்டாமென்று தூக்கி எறிவதற்கும் அனுமதி தேவை: ஒரு பொருளை வாங்குவதற்கும் அனுமதி தேவை. அதற்கு மூன்றாண்டு காலம், நான்காண்டு காலம் ஆகிறது. இது ஒவ்வொரு அரசிலேயும் இருக்கிற நடைமுறைச் சிக்கல். எனவேதான், ஒரு கார்ப்பரேஷனை அமைத்துவிட்டால், இந்தச் சிக்கல்களையெல்லாம் தீர்த்து விட முடியும். இன்னும் சொல்லப்போனால், ஒரு பொருள் வீணாகப் போய்விடுமென்று தெரிந்தாலும்கூட, அவர்கள் அதை விற்பதற்கோ அல்லது மாற்றி அமைப்பதற்கோ வாய்ப்பு இல்லாத ஒரு சூழ்நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். எனவே, ஒரு கார்ப்பரேஷனை அமைத்து விட்டால், அவர்கள் அதைச் செய்வதற்கு சுலபமாக இருக்கும்; சிறப்பாக நடக்குமென்று நாங்கள் நம்புகிறோம். அதற்கான ஏற்பாடுகள் இப்போது செய்யப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது, மருத்துவமனைகளில் பழுதடைகிற பொருள்களை உடனடியாக ரிப்பேர் செய்து கொடுப்பதற்கான அமைப்பை ஏற்படுத்தப் போவதாகக் கூறினார்கள். மருத்துவமனைகளில் உள்ள கருவிகள் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட உயர்ந்த கருவிகள். அவற்றை உடனடியாகப் பழுது பார்க்க முடியாமல், கிடப்பிலே போட்டுவிட்டு, அந்தப் பொருள் இல்லை என்று பதில் கூறுகிறார்கள். இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்ப்பதற்காக நல்லவர்கள் போற்றும் இந்த நல்லாட்சியில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, முறைப்படுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை முறைகேடு என்று நாம் சொல்லி விட முடியாது. ''எலக்ட்ரானிக் எக்யூப்மென்ட்ஸ்''-ஐப் பொறுத்தவரையில், அவற்றை ரிப்பேர் செய்வது என்பது, எல்லோராலும் முடியாது. குறிப்பிட்ட சில இடங்களிலே இருக்கிற, தகுதிவாய்ந்த எஞ்சினியர்கள்தான் ரிப்பேர் செய்ய வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஒரு பொருளை நாம் வாங்குகிறோம்; வாங்குகிறபோது, அந்தப் பொருளை யார் சப்ளை செய்தார்களோ, அதே கம்பெனி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அதை மெயின்டெனஸ் செய்ய ஏற்றுக்கொள்கிறார்கள். அதற்குப் பின்னாலே, அவர்கள் செய்யவதில்லை. சில நேரங்களிலே அதற்கான உதிரி பாகங்களை வாங்குவதற்காக வெளிநாடுகளை நாம் நாடவேண்டியிருக்கிறது. இதன் காரணத்தினால் 'டிலே'' ஆகிறது. இவ்வாறு ''டிலே'' ஆகிறபோது அங்கே இருக்கிற மருத்துவரால், அதைப் பின்தொடர்ந்து பார்த்து, அந்தக் காரியத்தைச் செய்வது நடைமுறையிலே முடியாத காரியம். காரணம், அவர்கள் தலையிலே வேலைப்பளு சுமத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பதற்காகத்தான், அதற்குத் தனியாக கார்ப்பரேஷன் இருந்தால், என்ன ரிப்பேர் ஆக இருந்தாலும், அவர்களுக்குத் தெரிவித்துவிட்டால், அவர்கள் அதன்மீது நடவடிக்கை எடுத்துவிட வேண்டுமென்ற அந்த சூழ்நிலையிலேதான் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதற்கு நாம் ஏற்பாடு செய்திருக்கிறோம். யார் வேண்டுமானாலும், ரிப்பேர் செய்து விடமுடியாது. இப்போது ''எல்காட்'' நிறுவனம் நமக்கு கொஞ்சம் உதவிகரமாக, சென்னையிலே இருக்கிற மருத்துவமனைகளிலே இருக்கிற அவைகளையெல்லாம் ரிப்பேர் செய்து கொடுப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கிறது. இதேபோன்று சில நிறுவனங்கள் நமக்கு இப்போது செய்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, மாநிலம் முழுவதும் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இதற்கான வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நாம் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ''எலக்ட்ரானிக் எக்யூப்மென்ட்ஸ்-ஐப்பொறுத்தவரையில்குறைந்தபட்சம் ஐந்தாறு மாவட்டங்களுக்கு ஒரு ''சர்வீஸ் சென்டர்'' என்றிருக்க வேண்டும் என்ற வகையிலே ஏற்பாடு செய்கிறோம். இதற்கு நிறைய பணியாட்களை எடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தச் சிக்கல்களையெல்லாம் நீங்கள் புரிந்துகொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, இவைகளையெல்லாம் சரிசெய்து, இந்த கார்ப்பரேஷன் வருகிறபோது, பிரச்சினைகள் தீர்க்கப்படும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அமைச்சர் மிக விரிவாகப் பதில் சொல்லிவிட்டார். உங்கள் கேள்விகளுக்கெல்லாம் அதிலேயே பதில் இருக்கும்.

வினா எண். 26, திருமதி என். கனகவல்லி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.